

## மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் மீளாய்வு

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களமானது 1928 மார்ச் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன் இது, திணைக்களத்தின் 84 ஆவது செயலாற்றுகை அறிக்கையாகும். இத்திணைக்களத்தின் பிரதான பணிகள் நாரஹேன்பிட்டி பிரதான அலுவலகம் மற்றும் வேரஹர உப அலுவலகம் ஆகியவற்றை மையமாகக் கொண்டும் ஏனைய மாவட்ட அலுவலகங்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திணைக்களத்தின் பிரதான பணிகளாக மோட்டார் வாகனங்களை புதிதாக பதிவுசெய்தல், உடைமை மாற்றம் செய்தலை பதிதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் இங்கு துணை பணிகளாக மோட்டார் வாகனங்கள் தொடர்பில் தொழினுட்ப சேவை, வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான நடவடிக்கைகள், புகைக் கசிவு தரத்தை ஒழுங்குபடுத்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

2012 ஆம் ஆண்டில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 397,295 ஆக இருந்ததுடன், அதன் பெறுபேறாக குறித்த ஆண்டு முடிவடையும்போது இலங்கையில் மொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 4,877,027 ஆக இருந்தது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன உடைமை மாற்றல்களின் எண்ணிக்கை 274,800 ஆவதுடன் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 618,053 ஆகும். புகைக் கசிவு பணியின் கீழ் நடமாடும் புகைக் கசிவு பரிசோதனைப் பிரிவொன்று உருவாக்கப்பட்டதுடன் வட மாகாணத்தில் 26 நிலையங்கள் செயற்படுத்தப்பட்டு பேணப்படுகின்றன.

சிறந்த மோட்டார் வாகன ஒழுங்குபடுத்தல்மூலம் மக்களின் உயர்ந்த பாராட்டு என்ற தொலைநோக்கின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் நிறைவேற்றுகின்ற சேவைகளை விரைவாகவும் மக்களின் உயர்ந்த பாராட்டுதலுடனும் நிறைவேற்றும் பொருட்டு நிறுவனத்தின் சகல பதவியினர்களும் அர்ப்பணத்துடன் சேவையாற்றியதுடன், திணைக்களத்தின் உட்கட்டமைப்பு சேவைகளை மேம்படுத்தும் முகமாக வழிகாட்டல்களை அவர்களுக்கும் பெற்றுக்கொடுத்த போக்குவரத்து அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சகல அமைச்சு பதவியினர்களுக்கும், அரச கொள்கைகளுக்கிணங்க தேவையான நிதியேற்பாடுகளை வழங்குவதன்மூலம் எங்களை வினைத்திறனாக வழிநடாத்திய கௌரவ போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ்.எச்.ஹரிஸ்சந்திர**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்

# பொருளடக்கம்


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| எமது தொலைநோக்கு | | …………………………………….. | VIII |
| எமது செயற்பணி | | …………………………………….. | VIII |
| எமது விழுமியங்கள் | | …………………………………….. | VIII |
| 1. | பதவியினர் | ................ | 40 |
| 1.1 | பதவிநிலை பதவியினர் | ................ | 40 |
| 1.2 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | ................ | 41 |
| 1.3 | 2012 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து இடமாற்றம் திணைக்களத்திற்கு பெற்றுவந்த பதவிநிலை அலுவலர்கள | ................ | 42 |
| 1.4 | இடமாற்றம் பெற்றுசென்ற பதவிநிலை அலுவலர்கள | ................ | 42 |
| 2. | பதவியினர் ஊக்கப்படுத்தல் | ................ | 43 |
| 2.1 | உள்ளகப் பயிற்சி | ................ | 43 |
| 2.2 | வெளியகப் பயிற்சி | ................ | 43 |
| 3. | நிருவாக நடவடிக்கைகள் | ................ | 44 |
| 3.1 | பிரதான அலுவலகப் பகுதிகள | ................ | 47 |
| 3.2 | ஆணையாளர் நாயக அலுவலகம | ................ | 48 |
| 3.3 | தாபனப் பகுதி | ................ | 48 |
| 3.4 | அபிவிருத்திப் பகுதி | ................ | 49 |
| 3.5 | உப அலுவலகம | ................ | 49 |
| 3.6 | மாவட்ட அலுவலகங்கள | ................ | 50 |
| 3.7 | திணைக்களத்தின் செயலாற்றுகை குறிகாட்டி | ................ | 51 |
| 4. | திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள | ................ | 51 |
| 4.1 | வாகன உரிமையை புதிதாக பதிவுசெய்தல்; | ................ | 52 |
| | 4.1.1 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை 1 | ................ | 57 |
| | 4.1.2 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை 11 | ................ | 58 |
| | 4.1.3 முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை | ................ | 58 |

4.1.4 மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை ................ 60

4.2 வாகன உடைமை மாற்றம் செய்தல் (மாற்றல்) ................ 61

4.2.1 மாற்றல் பிரிவுகளின் தொழிற்பாடுகள ................ 62

4.2.2 மாற்றல் பகுதிகளின் அலுவலர் உள்ளடக்கம ................ 62

4.2.3 மாற்றல் பகுதிகளின் பணிகளின் முன்னேற்றம் ................ 63

4.3 வேரஹர உப அலுவலகம் ................ 65

4.3.1 பதவியினா ................ 66

4.3.2 சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் ................ 66

4.4 தொழினுட்ப சேவைகள் ................ 68

4.5 புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்துதல் ................ 70

5. வருமானங்களும் செலவினங்களும் ................ 71

5.1 கணக்குக் கிளை ................ 71

5.2 சொகுசு வரிக் கிளை ................ 72

5.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை ................ 73

5.4 வருமானக் கணக்கு ................ 73

5.5 செலவினக் கணக்கு ................ 74

5.5.1 நிதிசார் முன்னேற்றம் (மூலதன செலவினம்) ................ 75

5.6 நிருமாணம் தொடர்பிலான மூலதனச்செலவு செயற்றிட்டங்கள்............. 76

பின்னிணைப்பு 1. வாகனங்களை புதிதாக பதிவுசெய்யும் கட்டணங்கள்- 2012 …….. 77

பின்னிணைப்பு 2. வாகன மாற்றல் கட்டணங்கள் - 2012 (ஒரேநாள் சேவை) …….. 79

பின்னிணைப்பு 3. வாகன மாற்றல் கட்டணங்கள் - 2012 (சாதாரண சேவை) …….. 80

பின்னிணைப்பு 4. புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு ஏற்புடைய மிகை …….. 81

## மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

இல.341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.

தொலைபேசி இல. 2694331-6 தொலைநகல் இல. 2694338

மின்னஞ்சல் : உ ழஅஅ..;அழவழசவசயககளை.பழஎ.டம

இணையத்தளம் -றறற. அழவழசவசயககளை.பழஎ.டம

ஆரம்பம் - 1928 சனவரி 01


### எமது தொலைநோக்கு

சிறப்பான மோட்டார் வாகன ஒழுங்குபடுத்தல்மூலம் மக்களின் உயர் பாராட்டைப்பெறுதல்

### எமது செயற்பணி

ஊக்கப்படுத்தப்பட்ட பதவியினரின் கூட்டு முயற்சியையும் நவீன தொழினுட்பத்தையும் ஈடுபடுத்துவதன்மூலம் மோட்டார் வாகனச் சட்டத்தையும் ஏனைய சட்ட ஒழுங்குவிதிகளையும் சிறப்பாக செயற்படுத்துவதன்மூலம் மக்களின் உயர்ந்த பாராட்டு பொருட்டு அர்ப்பணித்து செயலாற்றுதல்.

### எமது விழுமியங்கள்



## 1. பதவியினர்

### 1.1 பதவிநிலை பதவியினர் - 2012

- மோட்டார்வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் -திரு.எஸ்.எச்.ஹரிஸ்சந்திர
- ஆணையாளர் (நிருவாகம்) -திருமதி.பீ.பீ.கே.அபேசிறி குணவர்தன
- ஆணையாளர் (அபிவிருத்தி) -திரு.யு.கே.பண்டார
- பிரதி ஆணையாளர் (அபிவிருத்தி) -திரு.பீ.எச்.சீ.ரத்நாயக்க
- உதவி ஆணையாளர் (வர்த்தக வா.மா.கிளை) -திரு.கே.ரீ.எம்.எஸ்.சேரசிங்க
- உதவி ஆணையாளர் (வேரஹர) -திரு.ஜீ.எச்.ஆர்.குணவர்தன
- உதவி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) -திரு.மதுக பண்டார
- உதவி ஆணையாளர் (கார் மாற்றல் கிளை) -திரு.பி.ஏ.பிரேமசிங்க
- உதவி ஆணையாளர் (முச்சக்கர வண்டி பு.ப.) -திருமதி கே.எச்.ஜே.எல்.சேனாரத்ன
- உதவி ஆணையாளர் (முச்சக்கர வண்டி மாற்றல் கிளை) -திரு.கே.எஸ்.விஜயகீர்த்தி
- உதவி ஆணையாளர் (மோட்டார்சைக்கிள் மாற்றல் கிளை)-திருமதி.ஆர்.ஏ.கே.ரேணுகா
- உதவி ஆணையாளர் (வேரஹர கிளை) -திரு.சீ.டப்.கே.தர்மசேன
- உதவி ஆணையாளர் (வர்த்தக வாகன பு.ப.) -திரு.என்ஆர்.கெகுலந்தல
- உதவி ஆணையாளர் (வேரஹர கிளை) -திருமதி.ரீ.என்.த சில்வா
- பிரதான கணக்காளர் -திருமதி.டி.எஸ்.ஆர்.கே.குணதிலக
- கணக்காளர்(உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு) -திரு. ஆர்.கஹதுவஆரச்சி
- கணக்காளர் (கொடுப்பனவு) -திரு.டி.கே.எம்.ஆர்.குமாரசிறி
- கணக்காளர் (வருமானம்) -திருமதி.ஐ.ஜீ.எஸ்.எஸ்.சிறிமான்ன
- உதவி ஆணையாளர் -திரு.எஸ்.ஏ.பிரேமரத்ன
- நிருவாக உத்தியோகத்தர்(கட்டுப்பாடு) -திரு.டி.எம்.குணதிலக
- நிருவாக உத்தியோகத்தர்(அபிவிருத்தி) -திருமதி.டி.டப்.எஸ்.என்.சில்வா
- உதவி தரவு முறைவழியாக்கல் முகாமையாளர் -திரு.பீ.டப்.பீ.பி.ஈரியகம
- கணனி செய்நிரலர் -திரு.கே.கே.ஆர்.சமரவீர

## 1.2 பதவியினர் தகவல்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் - 2012

### 1.2.1 அட்டவணை

| பதவிப்பெயர் | உரிய சேவை | பதவியணி | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரித்த | உள்ளபடி | வெற்றிடம் |
| ஆணையாளர் நாயகம் | இலங்கை நிருவாக | 01 | 01 | 00 |
| மேலதிக ஆணையாளர் | இலங்கை நிருவாக | 01 | 01 | 00 |
| மேலதிக ஆணையாளர் (அபிவிருத்தி) | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| பிரதி/உதவி ஆணையாளர் | இலங்கை நிருவாக | 15 | 14 | 01 |
| பிரதி ஆணையாளர் | இலங்கை நிருவாக | 01 | 01 | 00 |
| உதவி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| உதவி ஆணையாளர் | இலங்கை தொழில்நுட்ப | 01 | 00 | 01 |
| பிரதான நிதி அலுவலர் | | 01 | 00 | 01 |
| பிரதான கணக்காளர் | இலங்கை கணக்காளர் | 01 | 01 | 00 |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | | 01 | 01 | 00 |
| கணக்காளர் | இலங்கை கணக்காளர் | 02 | 02 | 00 |
| சட்ட அலுவலர் | | 01 | 00 | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | அரச முகாமைத்துவ | 03 | 02 | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் | 02 | 00 | 02 |
| கணனி செய்நிரலர் | திணைக்கள சேவை | 02 | 01 | 01 |
| பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | 16 | 04 | 12 |
| முகாமை உதவியாளர் | அரச முகாமைத்துவ | 251 | 247 | 04 |
| மோட்டார் வாகனப் | இலங்கை தொழில்நுட்ப | 114 | 110 | 04 |
| சட்ட உதவியாளர் | சார்ந்த அலுவலர் | 03 | 01 | 02 |
| புலனாய்வு, அபிவிருத்தி | சார்ந்த அலுவலர் | 123 | 124 | -1 |
| அபிவிருத்தி உதவியாளர் | சார்ந்த அலுவலர் | 200 | 189 | 11 |
| நிகழ்ச்சித்திட்ட தரவு | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| கணனி முறைமை | திணைக்கள சேவை | 02 | 02 | 00 |
| கணனி தரவுப் பதியுநர் | திணைக்கள சேவை | 09 | 09 | 00 |
| தொழில்நுட்ப உதவியாளர் | அரச முகாமைத்துவ | 01 | 00 | 01 |
| திணைக்கள எழுதுநர் | திணைக்கள சேவை | 83 | 82 | 01 |
| வரவேற்பாளர் | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| சாரதி | சாரதி/ திணைக்கள | 11 | 09 | 02 |
| காரியாலய காரிய சகாயகர் | காரியாலய சேவகர் | 82 | 71 | 11 |
| திணைக்கள தொழிலாளி | திணைக்கள சேவை | 28 | 27 | 01 |
| துப்புரவேற்பாட்டுத் | திணைக்கள சேவை | 06 | 02 | 04 |
| **மொத்த எண்ணிக்கை** | | **964** | **909** | **60** |

### 1.3 இட மாற்றம் பெற்றுவந்த பதவிநிலை அலுவலர்கள் - 2012

| | | |
|---|---|---|
| 1. திரு. எஸ்.எச்.ஹரிஸ்சந்திர | - மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் | - 2012.03.23 |
| 2. திருமதி பீ.பீ.கே.அபேசிறி குணவர்தன | - ஆணையாளர்(நிருவாகம்) | - 2012.01.02 |
| 3. திரு கே.டி.எஸ்.சீ.குமாரதுங்க | - உதவி ஆணையாளர் | - 2012.01.02 |
| 4. திரு கே.டி.பி.ஜயசிங்க | - உதவி ஆணையாளர் | - 2012.01.02 |
| 5. திரு ஏ.எல்.கே.எம்.எம்.பீ.பண்டார | - உதவி ஆணையாளர் | - 2012.01.02 |
| 6. திரு என்.பீ.அமரதுங்க | - உதவி ஆணையாளர் | - 2012.01.03 |
| 7. திரு கே.வீ.எஸ்.பந்துகீர்த்தி | - பிரதி ஆணையாளர் | - 2012.10.22 |
| 8. திரு ரீ.என்.சந்திரசிறி | - நிருவாக உத்தியோகத்தர் (அபிவிருத்தி) | - 2012.10.10 |

### 1.4 இட மாற்றம் பெற்றுச்சென்ற பதவிநிலை அலுவலர்கள் - 2012

### 1.4 இட மாற்றம் பெற்றுச்சென்ற பதவிநிலை அலுவலர்கள் - 2012

| | | |
|---|---|---|
| 1. திரு பி.டி.எல்.தர்மபிரிய | - மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் | - 2012.03.01முதல் 2014.03.01வரை கடல்கடந்த லீவு |
| 2. திரு ஜீ.எஸ்.கே.கன்னங்கர | - மேலதிக ஆணையாளர் | - 2012.01.02 |
| 3. திரு யு.கே.பண்டார | - ஆணையாளர்(அபிவிருத்தி) | - 2012.12.21 |
| 4. திரு பீ.எச்.சீ.ரத்நாயக்க | - பிரதி ஆணையாளர் | - 2012.05.05 |
| 5. திரு ஜீ.எச்.ஆர்.குணவர்தன | - உதவி ஆணையாளர் | - 2012.12.31 |
| 6. திரு டி.எம்.குணதிலக | - நிருவாக உத்தியோகத்தர் (நிருவாகம்) | - 2012.05.04 |
| 7 திருமதி டி.எஸ்.ஆர்.கே.குணதிலக | - பிரதான கணக்காளர் | - 2012.12.05 முதல் ஓய்வு |

## 2 பதவியினர் ஊக்கப்படுத்தல்

### 2.1 உள்ளகப் பயிற்சி

| திகதி | வேலையரங்கு | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2012.04.05-2012.04.06 | 2012 பட்டதாரி நியமனத்தின் கீழ் புதிதாக நியமனம் பெற்றுவந்த அலுவலர்கள் பொருட்டான பயிற்சித்திட்டம் | 52 |
| 2012.06.26 | உயர் மக்கள் பாராட்டுதலுடன் மக்கள் தொடர்பினை பேணும் பொருட்டான பயிற்சித்திட்டம் | 32 |
| 2012.10.22 | ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமை பொருட்டான பயிற்சித்திட்டம் | 30 |
| | 2012 பட்டதாரி நியமனத்தின் கீழ் புதிதாக நியமனம் பெற்றுவந்த அலுவலர்கள் பொருட்டு தாபன விதிக்கோவை,அலுவலக முறைமை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பில் விழிப்பூட்டுவதற்கான பயிற்சி | 189 |

### 2.2 வெளியகப் பயிற்சி

| காலப்பகுதி | நிறுவனம் | பாடநெறி | பங்குபற்றிய அலுவலர்கள் |
|---|---|---|---|
| 2012.05.07 | மிலோதா நிறுவகம் | Government Payroll Management System | 02 |
| 2012.05.10 | Skill Development Fund Ltd. | Developing Secretaries & Receptionists | 01 |
| 2012.05.16-2012.05.18 | தேசிய சிரம ஆய்வு நிறுவகம் | Super 5s & Kaizen Management | 03 |
| 2012.08.20 | தொலைக்கல்வி நிலையம் - பதுளை | Computer Driving Licence | 02 |


| | | | |
|---|---|---|---|
| 2012.10.23-<br>2012.10.24 | இலங்கை மன்ற நிறுவகம் | Workshop on Good Governance & Leadership | 03 |
| 2012.10.08-<br>2012.10.24 | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்(SLIDA) | | 02 |
| 2012.12.06-<br>2012.12.14 | தேசிய சிரம ஆய்வு நிறுவகம் | சிரம உற்பத்திறன் வளர்ச்சிக்கான முகாமைத்துவம் | 03 |

**03 நிருவாக நடவடிக்கைகள்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களை முதலாகக் கொண்டு செயற்படுகின்ற திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகள் நாரஹேன்பிட்டி பிரதான அலுவலகத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன், வேரஹர உப அலுவலகம் மற்றும் நாடளாவியரீதியில் தாபிக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் அதன்மூலம் வழிநடாத்தப்படுகின்றன. இதன் நிருவாக நடவடிக்கைகள் பிரதானமாக ஆணையாளர் நாயக அலுவலகம், தாபனப் பகுதி, அபிவிருத்திப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. திணைக்களத்தின் நிருவாகக் கட்டமைப்பு பின்வரும் அமைப்புசார் குறிப்புமூலம் காட்டலாம்.

# DEPARTMENT OF MOTOR TRAFFIC

## ORGANIZATIONAL STRUCTURE




**DESIGNATION ABBR.**

**G.A/D.S:** GOVERNMENT AGENT / DISTRICT SECRETARY/DIVISIONAL SECRETARY
**Acct:** ACCOUNTANT
**L.O:** LEGAL OFFICER
**A.L.O: ASSISTANT LEGAL OFFICER**
**A.O.AD** : ADMINISTRATIVE OFFICER
**SEMV** : SENIOR EMV
**STO** : STATISTICAL OFFICER
**TA:** TECHNICAL ASSISTANT
**STAFF:** INVESTIGATION AND DEVELOPMENT ASSISTANTS + MANAGEMENT ASSISTANTS + DRIVERS+ KKS

**P.D** : PROJECT DIRECTOR (EMISION)
**D.C** : DEPUTY COMMISSIONER
**A.D.P.M** : ASSISTANT DATA PROCESSING MANAGER
**S.O** : SUPERVISING OFFICER
**EMV** : EXAMINER OF MOTOR VEHICLES
**A.L.O** : ASSISTANTS LEGAL OFFICER

**A.O.RR** : ADMINISTRATIVE OFFICER RECORD ROOM
**A.C** : ASSISTANT COMMISSIONER
**PRGM** : PROGRAMMER
**S.K** : STORES KEEPER
**STN** : STATISTICIAN
**A.O.DE** : ADMINISTRATIVE OFFICER DEVELOPMENT
**T.O** : TECHNICAL OFFICER
**T.O(E )**: TECHNICAL OFFICER E
**C.O** : CORDINATING OFFICER

**SUBJECT ABBR.;**

**D.L:** DRIVING LICENSE
**T:** TECHNICAL
**Tr.** : TRANSFER
**NP** : NUMBER PLATES
**E** : EMMISON
**NR** : NEW REGISTRATION
**RR1** : RECORD ROOM 1
**IT** : INFORMATION TECHNOLOGY
**RR2** : RECORD ROOM 2

## மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

## அமைப்புசார் கட்டமைப்பு

* COMMISSIONER GENERAL OF MOTOR TRAFFIC - மோட்டார் வாகனப்போக்குவரத்து ஆணையாளா நாயகம்

* COMMISSIONER (ADMINISTRATION) - ஆணையாளர் (நிருவாகம்)

* COMMISSIONER (DEVELOPMENT) – ஆணையாளர் (அபிவிருத்தி )

* CHIEF ACCOUNTANT - பிரதான கணக்காளர்

**DESIGNATION ABBR.**

G.A/D.S: அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ பிரதேசச் செயலாளர்
D.C: பிரதி ஆணையாளர்
A.C: : உதவி ஆணையாளர்
Acct: கணக்காளர்
L.O: சட்ட உத்தியோகத்தர்
A.L.O: உதவி சட்ட உத்தியோகத்தர்
TA: தொழில்நுட்ப உதவியாளர்
A.O.AD: நிருவாக உத்தியோகத்தர்
SEMV: சிரேட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர்
STO: புள்ளிவிபர உத்தியோகத்தர்
P.D: செயற்றிட்டப் பணிப்பாளர் (புகைக்கசிவு)
A.D.P.M.:
S.O: மேற்பார்வை உத்தியோகத்தர்
EMV: மோட்டார் வாகனப் பரிசோதகர்
A.O.RR: நிருவாக உத்தியோகத்தர் (பதிவேட்டறை)
PRGM: செய்நிரலர்
S.K.: களஞ்சியக் காப்பாளர்
STN: புள்ளிவிவரவியலர்
A.O.DE: நிருவாக உத்தியோகத்தர் (அபிவிருத்தி )
T.O: தொழில்நுட்ப உத்தியோகத்தர்
T.O(E): தொழில்நுட்ப உத்தியோகத்தர் (புகைக்கசிவு)
C.O: ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்

**SUBJECT ABBR.**

D.L: சாரதி அனுமதிப்பத்திரம்
T: தொழில்நுட்ப
Tr. : மாற்றல்
NP : இலக்க தகடுகள்
E : புகைக்கசிவு
NR: புதிய பதிவு
RR1 : பதிவேட்டறை 1
IT : தகவல் தொழில்நுட்ப
RR2 : பதிவேட்டறை

**3.1 பிரதான அலுவலகப் பகுதிகள**

1. ஆணையாளர் நாயக அலுவலகம்
2. தாபனக் கிளை
3. அபிவிருத்திக் கிளை
4. கணக்குக் கிளை
5. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கிளை
6. உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை
7. சட்டக் கிளை
8. சொகுசு வரிக் கிளை
9. பிரதான எழுதுநர் கிளை
10. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை I
11. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை II
12. முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை
13. மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை
14. மோட்டார் கார் மாற்றல் கிளை
15. வர்த்தக வாகன மாற்றல் கிளை
16. லொறி மாற்றல் கிளை
17. பஸ், இட வாகன மாற்றல் கிளை
18. முச்சக்கர வண்டி மாற்றல் கிளை
19. மோட்டார் சைக்கிள் மாற்றல் கிளை
20. தொழினுட்பக் கிளை
21. இலக்க தகட்டுக் (கொழும்பு) கிளை
22. இலக்க தகட்டுக் (வெளிப்பிரதேச) கிளை
23. பதிவேட்டறை I
24. பதிவேட்டறை II
25. புள்ளிவிபரக் கிளை

### 3.2 ஆணையாளர் நாயக அலுவலகம்

ஆணையாளர் நாயகம் : திரு.எச்.எஸ்.ஹரிஸ்சந்திர
( இ.நி.சே.தரம் I )

சொந்த உதவியாளர் : திருமதி. எச்.எஸ்.அபேதுங்க

பதவியினர் : 03

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பணிகள் பொருட்டு உதவுதல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும்.

### 3.3 தாபனப் பகுதி

ஆணையாளர்(நிருவாகம்) : திருமதி பீ.பீ.கே.அபேசிறி குணவர்தன

உதவி ஆணையாளர் : திரு. கே.ரீ.எம்.எஸ்.சேரசிங்க

நிருவாக உத்தியோகத்தர் : திருமதி டி.டப்.எஸ்.என்.சில்வா

மேற்பார்வையாளர் : திரு.பி.ஆர்.கே.பெரேரா

பதவியினர் : 36

***<u>பகுதியின் தொலைநோக்கு</u>***

''சாதகமான எண்ணங்கள் ஊடாக பயன்மிக்க அரச சேவை''

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மொத்த பதவியினரின் தாபன, நிருவாக நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் அத்துடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பேணுதலும் பராமரித்தலும் என்பன இப்பகுதியின் பிரதான பணியாவதுடன், அதற்கமைய பதவியினர் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வூபெறுதல், சேவை நீடிப்பு வழங்கல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், ஆள்சார் கோப்புக்களை பேணுதல், அதற்கு மேலதிகமாக சம்பள ஏற்றத்தை அங்கீகரித்தல், பல்வேறு கடன் வகைகளை அங்கீகரித்தல், அக்ரஹார காப்புறுதிப் பட்டியல்களை தீர்த்தல் போன்ற நிர்வாகம்சார் நடவடிக்கைகளாகவும் நீர்,

தொலைபேசி, மின்சார பட்டியல்களை கொடுத்துதீர்த்தலும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகளாகும்.

**3.4 அபிவிருத்திப் பகுதி**

| | |
|---|---|
| ஆணையாளர்(அபிவிருத்தி) | : திரு.யு.கே.பண்டார ( இ.நி.சே.தரம் I) |
| நிருவாக உத்தியோகத்தர் | : திருமதி டி.டப்.எஸ்.என் த சில்வா |
| மேற்பார்வையாளர் | : திரு ஆர்.ஈஸ்வரலிங்கம் |
| பதவியினர் | : 05 |

***<u>பகுதியின் தொலைநோக்கு</u>***

திருப்திகரமான பணியாற்றொகுதி ஊடாக உயர் மக்கள் பாராட்டு

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன்மூலம் நிருமாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பணியாளர் ஊக்கப்படுத்தல் பொருட்டு உள்ளக வெளியக பயிற்சித்திட்டங்களை செயற்படுத்துதல், திணைக்களத்தின் சகல பகுதிகளினதும் பிராந்திய அலுவலகங்களினதும் முன்னேற்ற அறிக்கைகளை சேகரித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுகள், அமைச்சுக்கள் மற்றும் பிற பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய சகல முன்னேற்ற அறிக்கைகள், வரவுசெலவுத்திட்ட அறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கைகள், செயல் திட்டங்களை தயாரித்தல், உற்பத்தித்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் போன்ற திணைக்களத்தின் பல முக்கிய பணிகள் இந்த பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.5 உப அலுவலகம்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி பிரதான அலுவலகத்துடன் இணைந்து தொழிற்படுகின்ற வேரஹர உப அலுவலகம், பிரதான அலுவலகத்தின் சேவைகளுக்கு புறம்பாக மேற்கொள்கின்ற திணைக்களத்தின் ஏனைய பணிகளான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பிலான சகல நடவடிக்கைகள் அத்துடன் வாகன பரிசோதனை, நிறை சான்றிதழ் வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலுவலகத்தின் சகல நடவடிக்கைகள் ஒரு பிரதி ஆணையாளர் மற்றும் இரண்டு உதவி ஆணையாளர்கள் ஆகியோர்களினால் நிருவகிக்கப்படுகின்றன.

**3.6 மாவட்ட அலுவலகங்கள்**





திணைக்களத்தின் பணிகளை மேலும் விஸ்தரிப்பதன்மூலமும் பன்முகப்படுத்துவதன்மூலமும் சேவைபெறுநர்கள் தமது மாவட்டத்தினுள் சகல சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு இதுவரையில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள், சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு மாவட்டச் செயலகங்களுடன் இணைக்கப்பட்ட அல்லது பிற குறித்த நிலப்பரப்பில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அலுவலகங்கள் பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவரினால் நிருவகிக்கப்படுகின்றன. மாவட்ட அலுவலகங்களை தாபித்தலின் கீழ் அனுராதபுரம், கேகாலை, மட்டக்களப்பு, களுத்துறை, புத்தளம், கம்பஹா, குருநாகல் மற்றும் நுவரெலிய மாவட்டச் செயலகங்களின் கட்டட நிருமாண நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. இந்த மாவட்ட அலுவலகங்கள்மூலம் பிரதானமாக சாரதி அனுமதிப்பத்திரம் பொருட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல், அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு ஏற்புடைய எழுத்துமூல மற்றும் செயல்முறைப் பரீட்சைகளை நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அனுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்ட அலுவலகங்கள்மூலம் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிட்டு வழங்குதலும், குருநாகல், குருநாகல் ஆகிய மாவட்ட அலுவலகங்கள்மூலம் online வசதிகளின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம வழங்குதல் தொடர்பிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த பணிகளுக்கு மேலதிகமாக, ஒதுக்கப்பட்ட இலக்கத்தின் அடிப்படையில் மாவட்டத்துக்குரிய மோட்டார் சைக்கிள்களை புதிதாக பதிவுசெய்தல், மாவட்டத்தினுள் குறித்த மோட்டார் சைக்கிள் மாற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் , நிறைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தொழினுட்ப சேவைக்குரிய நடவடிக்கைகள், திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான மாற்றல்களுக்கு ஏற்புடைய சகல நடவடிக்கைகள் பொருட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.7 திணைக்களத்தின் செயலாற்றுகை குறிகாட்டி

நீடித்துநிலைக்கத்தக்க தேசிய கொள்கைகளை கட்டியெழுப்பும் நோக்கில் மஹிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கினை அடிப்படையாகக்கொண்டு போக்குவரத்து அமைச்சின் கீழ் இந்த திணைக்களத்திற்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வரும் விதத்தில் சுருக்கமாக காட்டலாம்.

- திணைக்களத்தின் பிரதான மக்கள் சேவைகளின் எண்ணிக்கைரீதியிலான முன்னேற்றம்.
- வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்ற திட்டத்தின் தந்திரோபாயங்களை செயற்படுத்தும் முன்னேற்றம்.
- வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட மூலதன செயற்றிட்டங்களின் முன்னேற்றம்.

## 04. <u>திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள</u>

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளை பிரதானமாக ஐந்து(05) வகுதிகளின் கீழ் பிரித்துக்காட்டலாம்.

1. ஓட்டக்கூடிய வாகனங்களை மோட்டார்வாகனச் சட்டதிட்டங்களுக்கமைய பதிவுசெய்தல்.
2. வாகன உரிமை மாற்றத்தை பதிவுசெய்தல்
3. திறன் சான்றிதழின் அடிப்படையில் சாரதிகள் பொருட்டு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்.
4. தொழினுட்ப சேவை
5. புகைக் கசிவு பரிசோதனை பணிகளை மேற்பார்வை செய்தல்.

## 4.1 வாகன உரிமையை புதிதாக பதிவுசெய்தல்

இலங்கையினுள் முன்னர் பதிவுசெய்யப்பட்டிராத அதாவது இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றுசேர்க்கப்பட்ட வாகனங்களை முதன்முறையாக பதிவுசெய்தல் இதன்மூலம் கருதப்படும். இந்த முதலாவது பதிவுச் சான்றிதழை வழங்கும்போது விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பிற்பாடு பதிவுக் கட்டணம் செலுத்தியதன் பின் ஒரே நாளில் பதிவு நடவடிக்கைகளை முடித்து உரிய பதிவுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு மேலதிகமாக புதிதாக வாகனங்களை பதியும் நபர்களின் வசதி பொருட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி ஆகிய இரு நிறுவனங்களின் சேவையை திணைக்கள வளாகத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதுடன் முதலாவது வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு மேல் மாகாண மோட்டார் வாகன ஆணையாளர் அலுவலகத்தின் அலகு ஒன்றும் திணைக்கள வளாகத்தினுள் இயங்குகின்றது.

2012 ஆம் ஆண்டில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட 397,295 மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையுடன் 2012.12.31 ஆம் திகதியில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 4,877,027 ஆக இருந்தது. அப்பெறுமானம், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 8.87% வீத அதிகரிப்பாகும். 2011 ஆம் ஆண்டில் இந்த வளர்ச்சிவீதம் 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13.28% ஆக இருந்ததுடன், வளர்ச்சிவீதத்தில் வீழ்ச்சியொன்றை 2012 ஆம் ஆண்டில் காட்டுகின்றது. அரசாங்கத்தினால் அறவிடப்பட்ட இறக்குமதி வரிச் சதவீதம் அதிகரிக்கப்பட்டமை வாகனப் பதிவு வீழ்ச்சியடைந்தமைக்கான பிரதான காரணமாக குறிப்பிட முடியும்.


கடந்த ஐந்து வருடங்களினுள் இலங்கையில் வருடாந்தம் புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையையும் மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும் 4.1.1அட்டவணைமூலம் எண்ணிக்கைரீதியாகவும் 4.1.1வரைபடம்மூலம் வரைபுரீதியாகவும் சுருக்கமாகக் காட்டலாம்.

**4.1.1அட்டவணை :- வாகன எண்ணிக்கை**

| வருடம் | புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | மொத்த வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2008 | 265,199 | 3,390,993 |
| 2009 | 204,075 | 3,595,068 |
| 2010 | 359,243 | 3,954,311 |
| 2011 | 525,421 | 4,479,732 |
| 2012 | 397,295 | 4,877,027 |

**மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

**4.1.1 வரைபடம்**




**மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம**

இலங்கையில் புதிய வாகனப் பதிவை கருத்திலெடுக்கும்போது 2009- 2011வருட காலப்பகுதியினுள் வாகனப் பதிவு படிப்படியாக வளர்ச்சியடைந்தது. எனினும் இந்த நிலமை 2012 ஆம் ஆண்டில் மீண்டும் மாறி வளர்ச்சியில் வீழ்ச்சியொன்றை காட்டலாம்.

புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எட்டு(08) வாகன வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, மோட்டார் கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், மோட்டார் பஸ், இரட்டை பயன்பாட்டு வாகனம், மோட்டார் லொறி, இட வாகனம் (திராக்டர்), இட வாகனம் (இழுவை) என்றவாறாகும். அந்தந்த வகுதிகளின் கீழ் 2012ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையும் அது 2011ஆம்

ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி சதவீதமும் கீழுள்ள 4.1.2 அட்டவணைமூலம் காட்டலாம்.


**4.1.2அட்டவணை :- புதியப் பதிவு வாகன வகுதி**

| **வாகன வகுப்பு** | **2011 திசம்பர் 31இல் வாகன எண்ணிக்கை** | **2012திசம்பர் 31 இல் வாகன எண்ணிக்கை** | **அதிகரிப்பு சதவீதமாக** |
|---|---|---|---|
| மோட்டார் கார் | 57,886 | 31,546 | - 45.50% |
| முச்சக்கர வண்டி | 138,426 | 98,815 | - 28.61% |
| மோட்டார் சைக்கிள் | 253,331 | 192,284 | - 24.09% |
| மோட்டார் பஸ் | 4,248 | 3,095 | - 27.14% |
| இரட்டை பயன்பாட்டு வாகனம் | 33,518 | 37,397 | 11.57% |
| மோட்டார் லொறி | 14,818 | 12,266 | - 17.22% |
| இட வாகனம் (திராக்டர்) | 20,073 | 18,450 | - 08.08% |
| இட வாகனம் (இழுவை) | 3,121 | 3,442 | 10.28% |
| **மொத்தம்** | **525,421** | **397,295** | **- 24.38%** |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இட வாகனம் (இழுவை) புதிய பதிவு 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் நேர்கணிய வளர்ச்சியடைந்துள்ளது. ஏனைய ஆறு வகுதிகள் பொருட்டான ஒப்பீட்டு வளர்ச்சிவீதம் எதிர்கணிய மறை பெறுமானத்தை காட்டுகிறது. இரட்டை பயன்பாட்டு வாகனப் பதிவு 2012 ஆம் ஆண்டில் 11.57% ஆல் வளர்ச்சியடைந்துள்ளதுடன், இரண்டாம் இடத்தில் 10.28% உயர் வளர்ச்சி விகிதாசாரத்தைக் காட்டுவது இட வாகன (இழுவை) புதிய பதிவாகும். ஒட்டுமொத்த புதிய பதிவைக் கருத்திலெடுக்கும்போது – 24.38% ஆக எதிர்கணிய மறை வளர்ச்சி விகிதாசாரத்தைக் காட்டுகிறது.

**4.1.2வரைபடம்**





**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

புதிதாக பதிவுசெய்யப்படுகின்ற இந்த வாகனங்கள் பயன்படுத்துகின்ற எரிபொருள் வகை அடிப்படையில் பிரதானமாக 03 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவையாவன:

- பெற்றோல் பயன்படுத்தும் வாகனங்கள்
- டீசல் பயன்படுத்தும் வாகனங்கள்
- ஏனையன
  - பெற்றோல்/இலக்றிகல் வாகனம்
  - இலக்றிகல் வாகனம்
  - எரிபொருள் பயன்படுத்தாத வாகனங்கள்

2012 ஆம் ஆண்டில் 310,151 பெற்றோல் பயன்படுத்தும் வாகனங்களாகவும், 80,779 டீசல் பயன்படுத்தும் வாகனங்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஏனைய பாவனைகளின்படி 2615 பெற்றோல்/இலக்றிகல் வாகனங்களாகவும் 9 போன்ற சிறிய அளவில் இலக்றிகல் வாகனங்களாகவும் 3741 எரிபொருள் பயன்படுத்தாத வாகனங்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.


#### 4.1.3 வரைபடம்




2012 ஆம் ஆண்டில் இலங்கையினுள் புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்த நாடுகளை கருத்திலெடுக்கும்போது 397,295ஆக இருந்த புதிய பதிவு வாகன எண்ணிக்கையில் 313,215(79ழு) இந்தியாவிலிருந்தும், 39,621(10ழு) யப்பானிலிருந்தும்

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

இறக்குமதிசெய்யப்பட்டன என்பதுடன் 22,462(6ழு) வாகனங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. குறித்த பெறுமானங்களை சதவீதமாக பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டைப்போலவே 79ழு ஆன பெருமளவு வாகனங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பதனைக் காணலாம். அத்தரவுகளை 4.1.3 வரைபுமூலம் காட்டலாம்.




திணைக்களத்தில் வாகனங்களை புதிதாக பதிவுசெய்கையில் நான்கு(04) பிரிவுகளின் கீழ் அந்த வாகனங்கள் வகைப்படுத்தப்பட்டு பதிவு மேற்கொள்ளப்படுகிறது. அவையாவன:

1. மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை
2. முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை
3. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை I
   (கார், பஸ், லொறி, இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், சிங்கல் கெப், பிரய்முவர், திராக்டர், ஹர்ஸ், அம்பியுலன்ஸ்)
4. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை II

### 4.1.1 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை I

உதவி ஆணையாளர் : திரு. என்.ஆர்.கெகுலந்தல

மேற்பார்வையாளர் : திரு. என்.பிரேமசிறி

பதவியினர் : 36

***<u>பகுதியின் தொலைநோக்கு</u>***

"வர்த்தக வாகன புதிய பதிவுகளினூடாக மோட்டார் வாகனங்களை ஒழுங்குபடுத்துவதன்மூலம் உயர்ந்த மக்கள் பாராட்டு"

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

வாகனங்களை பதிவுசெய்யும் செயன்முறையினூடாக பயன்மிக்க, வினைத்திறனான சேவையை வழங்குவதன்மூலம் விசேட பணிக்கான வாகனங்கள், இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், மோட்டார் லொறி, மோட்டார் கார் மற்றும் முப்படைகளினால் கொள்வனவு செய்யப்படுகின்ற, அரச உடமையாக்கப்பட்டு ஏல விற்பனை செய்யப்படுகின்ற வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ் வழங்குவது இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும். இதற்கு மேலதிகமாக, 18, 19, 300, 301, 302 இலக்கம் கொண்ட பதிவு இலக்கங்களுடனான வாகனங்கள் மற்றும் முப்படைகள் ஏல விற்பனைமூலம் பெறும் வாகனங்கள் பொருட்டு கட்டணங்களை அறவிட்டு ஆங்கில EA எழுத்து வழங்குவது, அரைச் சொகுசு, இரட்டை பயன்பாட்டு சொகுசு வாகன வரி அறவிடுவதற்காக பதிவுசெய்தல் அத்துடன் அரச கொள்கையின் பிரகாரம் வாகனங்கள் பொருட்டு முன் இலக்கங்களை ஒதுக்குதல் மற்றும் அதற்காக கட்டணங்களை அறவிடுதலும் மேற்கொள்ளப்படுகிறது.

2012 ஆம் ஆண்டில் இப்பிரிவு, 106,196 மோட்டார் வாகனங்களை பதிவுசெய்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 114,905 ஆக இருந்ததுடன் அவ்வாண்டுடன் ஒப்பிடும்போது, 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட புதிய வர்த்தக வாகனங்களின் எண்ணிக்கை 3.57% இனால் வளர்ச்சி குறைவடைந்துள்ளது.

**4.1.2 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை II**

| | |
|---|---|
| உதவி ஆணையாளர் | : திரு. மதுக பண்டார |
| மேற்பார்வையாளர் | : திரு. என்.பிரேமசிறி |
| பதவியினர் | : 13 |

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

திராக்டர் மற்றும் பஸ் வண்டி ஆகிய வர்த்தக வாகனங்களை முதல்முறையாக பதிவுசெய்தல் இப்பகுதியின் முக்கிய பணியாகும்.

**4.1.3 முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை**

| | |
|---|---|
| ஆணையாளர் | : திருமதி கே.எச்.ஜே.லங்காதரி சேனாரத்ன |
| மேற்பார்வையாளர் | : திரு. எச்.விமலரத்ன |
| பதவியினர் | : 11 |

***<u>பகுதியின் தொலைநோக்கு</u>***

‘‘முச்சக்கர வண்டி புதிய பதிவு ஊடாக மனித நேயமுள்ள சட்டத்துக்கு கட்டுப்பட்ட சமுதாயம்’’

***<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>***

இதற்கு முன் பதிவுசெய்திராத முச்சக்கர வண்டிகளை முதல்முறையாக பதிவுசெய்தல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும். இதற்கு மேலதிகமாக, தூதுவராலய அலுவலகங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் உள்ள வாகன மாற்றலை பதிதல், அவ்வாகனங்களின் பதிவை இரத்துச்செய்தல், அவ்வாகனங்களை இந்நாட்டிலிருந்து அகற்றுவதற்கு ஏற்புடைய பணிகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

**4.1.3 அட்டவணை :- முச்சக்கர வண்டி புதிய பதிவின் போக்கு**

| **வருடம்** | **புதிதாக பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2006 | 64,466 |
| 2007 | 43,068 |
| 2008 | 44,804 |
| 2009 | 37,364 |
| 2010 | 85,648 |
| 2011 | 138,426 |
| 2012 | 98,815 |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

முச்சக்கர வண்டி புதிய பதிவினை கருத்திலெடுக்கையில் 2011ஆம் ஆண்டில் உயர் பதிவைக் காட்டியபோதிலும் அதற்கு முன்னைய வருடங்களில் போன்று 2012ஆம் ஆண்டில் பதிவின் போக்கு 98,815ஆக குறைந்த பெறுமானத்தை கொண்டுள்ளது. அந்த வீழ்ச்சியின் சதவீத பெறுமானம் -28.61% ஆகும். பின்வரும் 4.1.4 வரைபடத்தின்மூலம் அதனை தெளிவாக காட்டலாம்.

**4.1.4வரைபடம்**




**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

### 4.1.4 மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை

ஆணையாளர் : திரு.யு.கே.பண்டார

மேற்பார்வையாளர் : திரு.எஸ்.பீ.ரூபானந்த

பதவியினர் : 30

***பகுதியின் தொலைநோக்கு***

"கால தாமதமின்றி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குதல்"

***பகுதியின் தொழிற்பாடுகள்***


இலங்கையினுள் இதுவரையில் பதிவுசெய்திராத மோட்டார் சைக்கிள்களைப் புதிதாக பதிவுசெய்தலும் அதற்கு ஏற்புடைய சகல பணிகளையும் நிறைவேற்றுதல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அலுவலகங்களில் பதிவுசெய்து பிரதான அலுவலகத்துக்கு அனுப்பப்படுகின்ற MTA 02 படிவங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல் என்பன இப்பகுதியின் பிரதான தொழிற்பாட்டுக்கு மேலதிகமாக இடம்பெறுகின்றன.

4.1.4 அட்டவணை :- 2006ம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்ட புதிய மோட்டார் சைக்கிள் எண்ணிக்கையின் வளர்ச்சி

| வருடம் | பதிவுசெய்யப்பட்ட புதிய மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை | மொத்த வாகன எண்ணிக்கைக்கான பங்களிப்பு |
|---|---|---|
| 2006 | 156,626 | 1,422,140 |
| 2007 | 182,508 | 1,604,648 |
| 2008 | 155,952 | 1,760,600 |
| 2009 | 135,421 | 1,896,021 |
| 2010 | 204,811 | 2,100,832 |
| 2011 | 253,331 | 2,354,163 |
| 2012 | 192,284 | 2,546,447 |

***மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்***

### 4.1.5 வரைபடம்




**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

2012 ஆம் ஆண்டினுள் புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 192,284 ஆகும். இந்த மோட்டார் சைக்கிள் புதிய பதிவு 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, -24.1% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனைய எல்லா வருடங்களைப்போன்று மோட்டார் வாகன எண்ணிக்கை பொருட்டு அதிக பங்களிப்பை வழங்குவதன்மூலம் 2012 ஆம் ஆண்டிலும் மொத்த மோட்டார் வாகன எண்ணிக்கை பொருட்டு மோட்டார் சைக்கிள்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பு 2,546,447 போன்ற உயர் பெறுமானமாகும்.

## 4.2 வாகன உடைமை மாற்றம் செய்தல் (மாற்றல்)

வாகன மாற்றல் என்பதனால் பிரதானமாக கருதப்படுவது யாதெனில், மோட்டார் வாகனத் திணைக்களத்தில் ஆரம்ப பதிவை மேற்கொண்டுள்ள சகல வாகனங்களின் உரிமை மீள மாற்றத்தை பதிவுசெய்தலாகும். இந்த வாகன மாற்றல் பணி பொருட்டு அந்தந்த வாகன வகையின்படி மாற்றல் ஆறு(06)பிரிவுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

- லொறி மாற்றல் பிரிவு
- கார் மாற்றல் பிரிவு
- வர்த்தக வாகன மாற்றல் பிரிவு
- முச்சக்கர வண்டி மாற்றல் பிரிவு
- மோட்டார் சைக்கிள் மாற்றல் பிரிவு
- பஸ் மற்றும் இட வாகன மாற்றல் பிரிவு

### 4.2.1 மாற்றல் பிரிவுகளின் தொழிற்பாடுகள்

இந்த ஒவ்வொரு பிரிவும் அந்தந்த பகுதிக்குரிய நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் சுறுசுறுப்பாகவும் நிறைவேற்றுவதற்கு பொதுவான சேவைகளையும் ஒரேநாள் சேவை வசதிகளையும் வழங்கியிருப்பதுடன் இந்த சகல பகுதிகளினதும் தொழிற்பாடுகள் பொதுவாக பின்வருமாறு காட்டலாம்.

- மாற்றலை பதிவுசெய்தல்.
- சொத்தாண்மை உரிமை அல்லது அடகுடனான மாற்றலை பதிவுசெய்தல்.
- சொத்தாண்மை உரிமை அல்லது அடகினை ரத்துச்செய்து மாற்றலை பதிவுசெய்தல்.
- பதிவுச் சான்றிதழினதும் வாகன அடையாள அட்டையினதும் இணைப்பிரதிகளை வழங்குதல்.
- உரிய முறையில் மேற்கொள்கின்ற பௌதிக மாற்றங்களையும் ஆவணம்சார் மாற்றங்களையும் பதிவுச் சான்றிதழில் சேர்த்தல். உ-ம் : எந்திர இலக்கம், வர்ணம், முகவரி
- புதிய ஆங்கில எழுத்துடனான வாகனங்களின் இலக்க தகடுகளினதும் ஸ்ரீக்கர்களினதும் இணைப்பிரதிகள் வழங்கும் பொருட்டு தரவுகளை கணனியில் பதிதல்.
- உடைமை மாற்றம் பொருட்டு மாற்றல் கிளைக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள வாகனங்கள் பொருட்டு வருமான உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான MTA- 11 படிவத்தை சான்றுப்படுத்தி வழங்குதல்.
- சட்ட நடவடிக்கைகள் பொருட்டு தேவையான சான்றுப்படுத்தப்பட்ட கணனி பிரித்தெடுப்புக்களை வழங்குதலும் உரிய முறையில் கிடைக்கும் ஆட்சேபனைகளை குறித்துக்கொள்ளுதலும்.

### 4.2.2 மாற்றல் பகுதிகளின் அலுவலர் உள்ளடக்கம்

அந்தந்த மாற்றல்களுக்குரிய மேற்படி பணிகளை நிறைவேற்றும்போது உரிய பகுதியின் பதவியினர் பொறுப்புடன் குறித்த பணிகள் பொருட்டு கட்டுப்பட்டுள்ளதுடன், அந்தந்த மாற்றல் பிரிவுகளின் அலுவலர் உள்ளடக்கத்தை பின்வருமாறு சுருக்கமாக காட்டலாம்.

**4.2.1அட்டவணை :- மாற்றல் பகுதிகளின் அலுவலர் உள்ளடக்கம்**


| பிரிவு | பதவிநிலை அலுவலர் | மேற்பார்வையாளர் | புலனாய்வு, அபிவிருத்தி உதவியாளர் | தரவு/முறைமை பதியுநர் | அரச முகாமை உதவியாளர் | திணை. எழுதுநர் | கா.கா.ச./திணை. தொழிலாளி |
|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள் மாற்றல் | திருமதி ஆர்.ஏ.கே.ரேணுகா (உதவி ஆணையாளர்) | திரு.ஏ.எம்.சோமரத்ன | 06 | 02 | 06 | 06 | 04 |
| வர்த்தக வாகன மாற்றல் | திரு கே.எம்.எஸ்.சேரசிங்க (உதவி ஆணையாளர்) | திரு பி.ஜீ.சிறிபால | 01 | - | 04 | 08 | 02 |
| லொறி மாற்றல் | திருமதி பீ.பீ.கே. அபேசிறி குணவர்தன (மேலதிக ஆணையாளர்) | திரு ஏ.எம்.சோமரத்ன | 04 | - | 02 | 05 | 01 |
| கார் மாற்றல் | திரு பி.ஏ.பிரேமசிங்க (உதவி ஆணையாளர்) | திரு ஆர்.ஆர்.அலஹகோன் | 07 | - | 08 | 09 | 03 |
| முச்சக்கர வண்டி மாற்றல் | திரு கே.எஸ். விஜயகீர்த்தி (உதவி ஆணையாளர்) | திரு கே.பீ.பீ. பண்டார | 02 | - | 06 | 06 | 03 |
| பஸ்,இட வாகன மாற்றல் | திருமதி நிரோஷனி த சில்வா (உதவி ஆணையாளர்) | திரு டப்.கே. குமாரதாச | 01 | - | 02 | 03 | 01 |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

**4.2.3 மாற்றல் பகுதிகளின் பணிகளின் முன்னேற்றம்**

பதிவுசெய்யப்பட்ட வாகனங்களை மீள மாற்றல் பதிவுசெய்தலை கருத்திலெடுக்கும்போது 2012 ஆம் ஆண்டில் மொத்த மாற்றல்களின் எண்ணிக்கை 274,800 ஆக இருந்தது. வாகன மாற்றல்களில் இடம்பெற்ற வளர்ச்சியின் போக்கினை பின்வரும் 4.2.1வரைபு மூலம் காட்டலாம்.

4.2.1 **வரைபடம் : வாகன மாற்றல்களின் போக்கு**




**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**


எண்ணிக்கை குறிப்புகளின்படி 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 288,784 மாற்றல் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது -4.84% மந்தகரமான வளர்ச்சியைக் காட்டுவதன்மூலம் 2012 ஆம் ஆண்டில் மொத்த மாற்றல் எண்ணிக்கையான 274,800 மட்டத்துக்கு அடைந்துள்ளது. அந்த வளர்ச்சி 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 17.50% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது மந்தமான வளர்ச்சியாகும். அந்த மாற்றல் எண்ணிக்கை அந்தந்த வாகன வகுதிகளின்படி பின்வரும் வேறுபடுத்தி காட்டலாம்.

4.2.2 அட்டவணை : வாகன மாற்றல் உள்ளடக்கம்

| **வாகன வகை** | **2011** | **2012** |
|---|---:|---:|
| லொறி மாற்றல் | 44,936 | 37,328 |
| கார் மாற்றல் | 66,297 | 62,787 |
| வர்த்தக வாகன மாற்றல் | 47,793 | 37,126 |
| முச்சக்கர வண்டி மாற்றல் | 63,194 | 74,504 |
| மோட்டார் சைக்கிள் மாற்றல் | 39,401 | 41,094 |
| பஸ் மாற்றல் | 17,720 | 13,765 |
| இட வாகன மாற்றல் | 9,443 | 8,196 |
| **மொத்தம்** | **288,784** | **274,800** |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

### 4.2.2 வரைபடம்




**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

2012 ஆம் ஆண்டில் அதிக மாற்றல் இடம்பெற்றிருப்பது முச்சக்கர வண்டி மாற்றல்மூலமேயாகும். அதன் பெறுபேறாக இரண்டாம் இடத்துக்கு மோட்டார் கார் தள்ளப்பட்டிருப்பதுடன் மொத்த வாகன மாற்றல் எண்ணிக்கையில் குறைந்தளவு முக்கியத்துவம் பெற்றிருப்பது இட வாகன மாற்றல்களாகும்.

### 4.3 வேரஹர உப அலுவலகம்

வேரஹர உப அலுவலகத்தின் நடவடிக்கைகள் பின்வரும் பகுதிகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

1. தாபனக் கிளை
2. புதிய சாரதி அனுமதிப்பத்திரக் கிளை
3. சாரதி அனுமதிப்பத்திரங்களை அமுல்படுத்தும் கிளை
4. சாரதி அனுமதிப்பத்திர இணைப் பிரதிகள் கிளை
5. தொழினுட்பக் கிளை
6. வாகன பரிசோதனைக் கிளை
7. சிறாப்பர் கிளை
8. அஞ்சல் கிளை
9. பதிவேட்டறை I/II
10. பரீட்சை மண்டபம்

### 4.3.1 பதவியினர்

உதவி ஆணையாளர்கள் : திரு.ஜி.எச்.ஆர்.குணவர்தன

: திரு.என்.பீ.அமரதுங்க

பதவியினர் : 119

### 4.3.2 சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உப அலுவலகமாக வேரஹர அலுவலகத்தை குறிப்பிடலாம் என்பதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்புற்ற சகல பணிகளும் பிரதானமாக இதன்மூலம் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அந்நடவடிக்கைகள் அம்பாந்தோட்டை, அனுராதபுரம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இந்த சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையும் அதன் தன்மையும் திணைக்களம் தாபிக்கப்பட்டதிலிருந்து பல தடவைகளில் காலத்திற்கு ஏற்றவிதத்தில் மாற்றத்திற்கு உட்பட்டு தற்போது வழங்கப்படுகின்ற சருவதேச தரத்தினைக் கொண்ட புதிய ஸ்மாட் அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் வரையில் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த சருவதேச தரத்தினைக் கொண்ட ஸ்மாட் அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் போலியாக அச்சிடப்படுவதனை தடுக்கும் பொருட்டு உயர் தரத்திலான பாதுகாப்பு உத்திகள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன் அனுமதிபத்திரத்தைக் கொண்டிருப்பவரின் குருதி வகையும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது பிரதானமாக இரு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:

1. On Line (வேரஹர அலுவலகத்தினால் பின்பற்றப்படுகிறது)
2. Off Line (மாவட்ட அலுவலகத்தினால் பின்பற்றப்படுகிறது)

2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களில் காலாண்டு ரீதியான தரவுகளை பின்வரும் அட்டவணைமூலம் காட்டலாம்.


### 4.3.1 அட்டவணை

| வகை | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மாற்றுதல் | 89,441 | 54,511 | 46,947 | 40,566 | 231,465 |
| திருத்தம் | 532 | 475 | 526 | 587 | 2,120 |
| இணைப் பிரதிகள் | 2,752 | 3,201 | 3,926 | 3,812 | 13,691 |
| வாகன வகுப்புக்களை சேர்த்தல் | 3,215 | 2,693 | 1,351 | 991 | 8,250 |
| சருவதேச சாரதி அனுமதிப்பத்திர மாற்றுதல் | 946 | 2,059 | 5,324 | 6,165 | 14,494 |
| புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 86,116 | 74,138 | 95,032 | 92,673 | 347,959 |
| புதுப்பித்தல் | 9 | 11 | 16 | 38 | 74 |
| **முழு மொத்தம்** | 183,011 | 137,088 | 153,122 | 144,832 | 618,053 |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் கருத்திலெடுக்கையில் அந்த அளவு சனவரி மாதம் 34,354 உம், திசம்பர் மாதம் 16,400 ஆக வருடம்பூராகவும் வழங்கப்பட்ட மொத்த அளவு 347,959 ஆகும். வருடத்தின் ஒற்றோபர் மாதத்தினுள் வழங்கப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திர அளவு 41,656 ஆக உயர் பெறுமானம் ஒன்றை காட்டியுள்ளது. இந்த மொத்த சாரதி அனுமதிப்பத்திர அளவு கம்பஹா, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய மாவட்ட அலுவலகங்களினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர அளவினையும் கூட்டுவதன்மூலம் பெறப்பட்டதாகும்.

**4.3.1 வரைபடம்:- வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர அளவு**




**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

**4.4 தொழினுட்ப சேவைகள்**

வாகனங்களை பதிவுசெய்யும்போது மேற்கொள்ளப்படுகின்ற தொழினுட்ப சேவைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தொழினுட்பக் கிளையினால் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பணியானது, இலங்கை தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகன பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்படுகிறது. உதவி ஆணையாளர் (தொழில்நுட்பம்), 04 பிரதான மோட்டார் வாகன பரிசோதகர்கள், 110 மோட்டார் வாகன பரிசோதகர்கள் ஆகியோர்களை இது உள்ளடக்கியுள்ளது. தொழினுட்ப சேவை பொருட்டு இந்த மோட்டார் வாகன பரிசோதகர்கள், பிரதான அலுவலகத்திலும் வேரஹர உப அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

தொழினுட்ப சேவை தொடர்பில் பிரதான அலுவலகத்தினாலும், வேரஹர உப அலுவலகத்தினாலும், சகல மாவட்ட அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை பொதுவாக பின்வருமாறு காட்டலாம் :

- மோட்டார் வாகனச் சட்டத்தின்படி சட்டதிட்ட, ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் திருத்தும் நடவடிக்கைகள்.
- சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பில் எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சைகளை நடாத்துதல்.
- வாகனங்களை பரீட்சித்துப்பார்த்து நிறை சான்றிதழ் வழங்குதல், திருத்தும் சான்றிதழ், அடையாள சான்றிதழ் வழங்குதல்.
- அரச வாகனங்கள் பொருட்டு தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.
- கேள்விச் சபை பொருட்டு பங்குபற்றுதல், வாகனங்களை ரத்துச்செய்தல், ஏல விற்பனைக்கு முன் மதிப்பீடு செய்யும் முகமாக உரிய சபைகளில் பங்குபற்றுதல்.
- தொழினுட்ப கராஜ்(வாகன திருத்துமிடங்களை) பதிவுசெய்தலும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தலும்.
- CMT செசி இலக்கங்களையும், இழுவை செசி இலக்கங்களையும் வழங்குதல்.
- சாரதி போதனை பாடநெறிகளையும் ஏனைய பயிற்சித்திட்டங்களையும் தயாரித்து செயற்படுத்துதல்.
- பாரதூர விபத்துக்கள் தொடர்பில் வாகனங்களை பரீட்சித்துப்பார்த்து அவதானிப்புக்களை நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல்.

பிரதான அலுவலகம் உள்ளிட்ட ஏனைய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழினுட்ப சேவைகளை பிரதான இருபது(20) வகுதிகளின் கீழ் பிரித்துக் காட்டலாம்

என்பதுடன் அந்த ஒவ்வொரு வகுதிக்குரிய எண்ணிக்கைரீதியிலான தரவுகளை பின்வரும் 4.3.2 அட்டவணைமூலம் சுருக்கமாக காட்டலாம்.

**4.3.2 அட்டவணை**

| | புணி | அளவு-2012 |
|---|---|---|
| 01. | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையை நடாத்துதல் | 89,637 |
| 02. | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயல்முறைப் பரீட்சையை நடாத்துதல் | 119,727 |
| 03. | இலக்க தகடுகளை வழங்குதல் (கொழும்பு) | 317,200 |
| 04. | இலக்க தகடுகளை வழங்குதல் (வெளிப் பிரதேசம்) | 128,869 |
| 05. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை சோதனை செய்தல் | 77 |
| 06. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை பதிவுசெய்தல் | 93 |
| 07. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை புதுப்பித்தல் | 755 |
| 08. | சாரதி பாடசாலைகளை சோதனை செய்தல் | 51 |
| 09. | மாதிரி படிவங்களை வழங்குதல் | 372 |
| 10. | CMT செசி இலக்கங்களை வழங்குதல் | 41 |
| 11. | இழுவை செசி இலக்கங்களை வழங்குதல் | 3008 |
| 12. | சுங்க ஏலவிற்பனை வாகனங்கள் பொருட்டு CMT செசி இலக்கங்களை வழங்குதல் | 96 |
| 13. | மோட்டார் சைக்கிள்களை சோதனை செய்தல் | 2,074 |
| 14. | புதிய மோட்டார் சைக்கிள்களை கணனியில் பதிதல் | 177,732 |
| 15. | நிறை சான்றிதழ் வழங்குதல் | 11,579 |
| 16. | அடையாள சான்றிதழ் வழங்குதல் | 1,785 |
| 17. | தடையுத்தரவு வழங்குதல் | 1,846 |
| 18. | தடையுத்தரவை நீக்குதல் | 1,885 |
| 19. | வாகன விபத்துக்களை சோதனை செய்தல் | 5,056 |
| 20. | விசேட கடமை பொருட்டு பங்குபற்றுதல் | 348 |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

**4.5 புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்துதல்.**

புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்தும் முகமாக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினுள் புகைக் கசிவு செயற்றிட்ட அலுவலகமொன்று பேணப்படுவதுடன் அதன் பதவியினர் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| பணிப்பாளர் (புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டம்) | : | 01 | - |
| கணக்காளர் (புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டம்) | : | 01 | |
| பதவியினர் | : | 12 | |

சூழல் மாசடைதலை தவிர்ப்பதன்மூலம் சூழல் மாசுறலுக்கு வழிவகுக்கும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினை கட்டுப்படுத்தும் நோக்கில் 2008 சனவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/17 இலக்கமுடைய அதி விசேட கசெற் கட்டளை மற்றும் 2009 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் ஆகியவற்றுக்கமைய 2008 நவம்பர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் புகைக் கசிவு பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு இரண்டு (02) தனியார் கம்பனிகள் நியமிக்கப்பட்டிருப்பதுடன் அந்தக் கம்பனிகளினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும். புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழ் எனப்படுகின்ற புகைச் சான்றிதழானது, வாகனத்தின் வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

புகைக் கசிவு பரிசோதனை பணியானது ஆரம்பத்தில் வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது முதல் பதிவிலிருந்து மூன்று (03) வருடங்கள் வரையில் இந்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட புத்தம் புதிய வாகனங்கள் (Brand New Vehicles ) பொருட்டு புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றதாய் இருந்தது. இது, 2011.02.01 ஆம் திகதியிலிருந்து முதல் வருடம் வரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1975 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் இந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் பொருட்டு வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றது. இதற்கு மேலதிகமாக, சகல விவசாய வாகனங்கள் பொருட்டு வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றது.

**<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>**

வாகன புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டம் பற்றி பொது மக்களை விழிப்பூட்டுதல், உரிய சுற்றறிக்கைகளை வெளியிடுதலும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், வாகனங்களை முகாமைசெய்தல், வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன புகைக் கசிவு செயற்றிட்ட அலுவலகத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

புகைக் கசிவு நடவடிக்கைகளில் தற்போது எழுந்துள்ள பிரச்சினையாக இருப்பது, உரிய கம்பனிகளின் சில நிலையங்கள் புகை வெளியேற்றும் வாகனங்கள் பொருட்டு வஞ்சகமாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதேயாகும். புகைக் கசிவு நடவடிக்கைகளை மிகவும் சிறந்த முறையில் மேற்பார்வை செய்யும் முகமாக வீதிப் பரிசோதனையை விஸ்தரிப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நெடுஞ்சாலைகளில் புகைப் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய யந்திரங்கள் அளவினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இங்கு புகைச் சான்றிதழுடனான வாகனமேனும் நெடுஞ்சாலைகளில் புகை வெளியேற்றி ஓடும் சந்தர்ப்பங்களில் அவற்றை நிறுத்தி சோதனை செய்வதற்கும், அத்தகைய வாகனங்கள் தொடர்பில் தொலைபேசி தகவல் கிடைக்குமிடத்து அவற்றை வரவழைத்து சோதனை செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் அசுத்த வளியற்ற சுத்தமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 5 வருமானங்களும் செலவினங்களும் - 2012

### 5.1 கணக்குக் கிளை

| | | |
|---|---|---|
| பிரதான கணக்காளர் | : | திருமதி.டி.எஸ்.ஆர்.கே.குணதிலக |
| கணக்காளர் | : | திரு.டி.கே.எம்.ஆர்.குமாரசிறி |
| மேற்பார்வையாளர் | : | திருமதி எல்.ஜி.எஸ்.மங்கலிகா |
| பதவியினர் | : | 25 |

***<u>பகுதியின் தொலைநோக்கு</u>***

‘‘சரியானதும் வெளிப்படையானதுமான பயனுள்ள நிதி முகாமைத்துவத்தின்மூலம் நிறுவனம்சார் விருத்தி’’

***பகுதியின் தொழிற்பாடுகள்***

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் சகல அலுவலர்கள் பொருட்டான சம்பளம், மேலதிக நேரம், பிரயாணச் செலவு, கடன் முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கை, திணைக்களத்திற்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்தல், சகல உபகரண மற்றும் கட்டட பழுதுபார்த்தல் நடவடிக்கை, வருமான செலவினம் தொடர்பிலான சகல கணக்கு நடவடிக்கை, கணக்காய்வு விசாரணை மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு உரிய நடவடிக்கை பொருட்டு அறிக்கை சமர்ப்பித்தல், வருமானங்களை சேகரித்து கணக்குகளில் பதிதல், பொது திறைசேரிக்கு பணம் அனுப்புதல், நிதி ஒழுங்குவிதி 135 இன் கீழ் தத்துவங்களை கையளித்தலுக்கு ஏற்புடைய நடவடிக்கைகள் என்பன கணக்குகள் கிளையின் தொழிற்பாடுகளாகும்.

## 5.2 சொகுசு வரிக் கிளை

| | |
|---|---|
| கணக்காளர் | : திருமதி.ஐ.ஜீ.எஸ்.எஸ்.சிறிமான்ன |
| மேற்பார்வையாளர் | : திரு.பி.ஜி.ஏ.டி.போல் |
| பதவியினர் | : 12 |

***பகுதியின் தொலைநோக்கு***

‘‘முறையான வரி விதிப்புமூலம் தேசிய அபிவிருத்திக்கு உதவிசெய்தல்’’

***பகுதியின் தொழிற்பாடுகள்***

1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களின் கீழ் சொகுசு, பகுதியளவில் சொகுசு, இரட்டை பயன்பாட்டு பகுதியளவில் சொகுசு வரி அறவீடு மேற்கொள்கின்ற காப்புறுதி நிறுவனங்களை முகாமைசெய்தலும் வழிகாட்டுதலும், வரிக் கொடுப்பனவு தொடர்பில் வாகன உரிமையாளர்களை விழிப்பூட்டுதலும் நிலுவை வரிகளை அறவிடுதலும், வரி செலுத்துதல் தொடர்பில் அந்தந்த வாகனங்கள் பொருட்டு

கணனி முறைமையினை பேணுதல், வரி வருமானங்களை பொது திறைசேரிக்கு அனுப்புதல் மற்றும் வருமான அறிக்கைகளை தயாரித்தல்.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை

பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் : திரு.ஆர்.கஹதூவஆரச்சி

பதவியினர் : 08

***பகுதியின் தொலைநோக்கு***

"கணக்காய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள்மூலம் உயர்ந்த உற்பத்தித்திறன்"

***பகுதியின் தொழிற்பாடுகள்***

திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதான அலுவலகம், உப அலுவலகம் உள்ளிட்ட சகல கிளை அலுவலகங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் அத்துடன் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் இப்பகுதியின் தொழிற்பாடுகளாகும்.

## 5.4 வருமானக் கணக்கு

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் சேகரிக்கப்படுகின்ற சகல வருமானங்களை மூன்று (03) வகுதிகளின் கீழ் காட்டலாம். அவையாவன,

- ✓ சொகுசு மோட்டார் வாகன வரி
- ✓ மோட்டார் வாகன விற்பனை மீதான வரி
- ✓ மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

**2012ஆம் ஆண்டு பொருட்டு மதிப்பிடப்பட்ட வருமானமும் உண்மையான வருமானமும்.**

5.4.1 அட்டவணை

| **வருமான விபரம் / வருமான தலைப்பு** | **2012 மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா** | **2012 உண்மையான வருமானம் ரூபா** |
|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வரி | 1,150,000,000.00 | 1,253,220,848.00 |
| மோட்டார் வாகன விற்பனை மீதான வரி | 34,000,000.00 | 39,9382,100.00 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் | 6,518,400,000.00 | 6,577,711,148.00 |
| **மொத்த வருமானம்** | **7,702,400,000.00** | **7,870,314,096.00** |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

2012 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட சொகுசு மோட்டார் வாகன வரியை உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும்போது 108.9% ஆல் உயர்வடைந்துள்ளதுடன் மோட்டார் வாகன விற்பனை மீதான வரி 115.8% ஆல் உயர்வடைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள், உண்மையான வருமானத்தை விட 100.9% ஆல் உயர்வடைந்துள்ளதுடன் அதன் பெறுபேறாக மொத்த உண்மையான வருமானம் 2012 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட 102% ஆல் உயர்வடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும்போது 2012 ஆம் ஆண்டில் மொத்த உண்மையான வருமானத்தின் அதிகரிப்பு 111% ஆகும்.

**5.5 செலவினக் கணக்கு**

5.5.1 அட்டவணை

| **செலவின விபரம் / செலவின தலைப்பு** | **2012 மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா** | **2012 உண்மையான செலவினம் ரூபா** |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 1,217,300,000.00 | 1,528,893,206.00 |
| மூலதன செலவினம் | 748,200,000,00 | 1,019,515,927.00 |
| **மொத்த செலவினம்** | **1,965,500,000.00** | **2,548,409,133.00** |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூ. 1,217,300,000.00 ஆக இருந்ததுடன், ஆண்டில் உண்மையான செலவினம் ரூ. 2,548,409,133.00 ஆகும். அந்த செலவினங்களை மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதன செலவினம் என இரண்டு பிரதான செலவினத் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்த முடியும் என்பதுடன் வருடத்தின் உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூ. 1,528,893,206.00 ஆக இருந்ததுடன், வருடத்தின் உண்மையான மூலதன செலவினம் ரூ. 1,019,515,927.20 ஆகும்.

### 5.5.1 நிதிசார் முன்னேற்றம் (மூலதன செலவினம்)

5.5.2 அட்டவணை : மூலதன செலவின அறிக்கை - 2012(சனவரி – திசம்பர்)

| செலவின தலைப்பு | விபரம் | பெறுமதி (ரூ.ச.) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|
| **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | |
| 307-02-01-2001 | கட்டடமும் நிருமாணிப்புக்களும் | 14,766,041.33 | 92% |
| 307-02-01-2002 | பொறியும் இயந்திரமும் | 3,110,662.85 | 89% |
| 307-02-01-2003 | வாகனங்கள் | 190,669.52 | 10% |
| **மூலதன சொத்து கொள்ளல்** | | | |
| 307-02-01-2102 | தளபாடமும் அலுவலக உபகரணமும் | 5,818,331.76 | 39% |
| 307-02-01-2103 | பொறியும் இயந்திரமும் | 14,854,444.40 | 42% |
| **இயலளவு கட்டியெழுப்புதல்** | | | |
| 307-02-01-2401 | பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும் | 848,309.60 | 50% |
| **கட்டடமும் நிருமாணிப்புக்களும்** | | | |
| 307-02-01-09-2104 | வேரஹர உத்தேச கட்டடத்தை கொள்ளல் | 0 | 0% |
| 307-02-01-10-2104 | பிரதேசச் செயலகங்களில் பிராந்திய அலுவலகங்களை உருவாக்குதல் | 36,050,590.93 | 68% |
| **பிற மூலதன சொத்துக்கள்** | | | |
| 307-02-01-01-2502 | சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுதல் | 934,999,067.52 | 100% |

**மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

## 5.6 நிருமாணம் தொடர்பிலான மூலதன செலவு செயற்றிட்டங்கள்

- ரூ. 18.8 மில்லியன் செலவுசெய்து பிரதான அலுவலகத்தின் உண்டிச்சாலையை நவீனமயப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பித்தல்.

- ரூ. 53.34 மில்லியன் செலவுசெய்து நுவரெலியா மாவட்ட அலுவலக கட்டட நிருமாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- மட்டக்களப்பு மாவட்ட அலுவலகக் கட்டடம் ரூ. 1.55 மில்லியன் செலவுசெய்து உள்ளக செயன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ரூ. 7.33 மில்லியன் செலவுசெய்து களுத்துறை மாவட்ட அலுவலகத்தின் உள்ளக செயன்முறை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- கம்பஹா மாவட்ட அலுவலக நிருமாண வேலைகள் முடிவடைந்துள்ளதுடன், ரூ. 10.90 மில்லியன் செலவுசெய்து முடித்துள்ளதுடன், உள்ளக செயன்முறை நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.

- முச்சக்கர வண்டி புதிய பதிவுக்கிளை பொருட்டு ரூ. 1.88 மில்லியன் செலவுசெய்து புதிய அலுவலக வளாகமொன்று அமைத்தல்.



***பிரதான அலுவலகத்தின சிற்றுண்டிச் சாலையை புதுப்பிதல்***

பின்னிணைப்பு -01

**வாகன புதிய பதிவுக் கட்டணம் - 2012**

| வாகன<br>வகுப்பு | பதிவுக்<br>கட்டணம்<br><br>ரூ. | இலக்க<br>தகட்டு<br>க்<br>கட்டண<br>ம் | நிறைச்<br>சான்றி<br>தழ்<br>கட்டண<br>ம் | அஞ்சல்<br>கட்டண<br>ம்<br><br>ரூ. | மாற்றல்<br>கட்டண<br>ம்<br><br>ரூ. | தண்டப்பணம் சுங்கத்திலிருந்து விடுவித்த திகதி முதல் | |
|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார்<br>கார் | CC =1600,<br>15,000/-<br>CC>1600,<br>20,000/- | 3300/- | 500/- | 50/- | 7750/- | 30நாள். மேல் 2வரு.குறை<br>1வரு. மேல் 2வரு. குறை<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,500/-<br>10,000/-<br>15,000/-<br>25,000/- |
| இரட்டை<br>பயன்பாட்டு<br>வாகனம் | 15000/- | 3300/- | 500/- | 50/- | 7750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,500/-<br>10,000/-<br>15,000/-<br>25,000/- |
| மோட்டார்<br>லொறி | 3000/- | 3300/- | 500/- | 50/- | 3750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 4,000/-<br>5,000/-<br>6,800/-<br>7,800/-<br>9,800/- |
| மோட்டார்<br>பஸ் | 3000/- | 3300/- | | 50/- | 3750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 7,000/-<br>8,400/-<br>9,500/-<br>10,500/-<br>13,500/- |
| விசேட பணி<br>வாகனம் | 20,000/- | 3300/- | 500/- | 50/- | 2800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 3,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/-<br>10,000/- |
| அம்பியுலன்<br>ஸ் | 10,000/- | 3300/- | 500/- | 50/- | 1800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>4,000/-<br>4,500/- |
| அமங்கல<br>வாகனம் | 10,000/- | 3300/- | 500/- | 50/- | 1800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,000/-<br>8,000/-<br>9,000/-<br>10,000/- |
| லொறி<br>இழுவை | 7500/- | 3300/- | 500/- | 50/- | 3100/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 5,000/-<br>6,000/-<br>7,000/-<br>8,000/-<br>9,000/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இட வாகனம்/ திரக்டர் 4 சக். | 7000/- | 3300/- | 500/- | 50/- | 2060/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,750/-<br>4,500/-<br>6,000/-<br>7,000/-<br>8,000/- |
| கை திரக்டர் 4 சக். | 1500/- | 2400/- | 500/- | 50/- | 1150/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 1,750/-<br>2,000/-<br>2,500/-<br>3,500/-<br>5,000/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 6000/- | 3300/- | 500/- | 50/- | 2800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/-<br>6,000/- |
| பிரயிம்மூவர் | 15000/- | 3300/- | 500/- | 50/- | 3750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 4,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/-<br>10,000/- |
| மோட்டார் ரயிசிகள் | 2500/- | 2800/- | | | 1200/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,500/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/-<br>6,000/- |
| மோட்டார் சைக்கிள் | 2000/- | 2400/- | | | 500/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 1,500/-<br>1,750/-<br>2,000/-<br>2,500/-<br>4,000/- |
| மோட்டார் ரயிசிகள்/ வான் | 3000/- | 2800/- | | | | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 3,000/-<br>4,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 1500/- | | | 50/- | 1,540/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>3,500/-<br>4,000/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 1500/- | | | 50/- | 1,540/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>3,500/-<br>4,000/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 1000/- | | | 50/- | 1,150/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/- |

பின்னிணைப்பு -02

**வாகன மாற்றல் கட்டணம் - 2012 (ஒரே நாள் சேவை)**

(ரூபா)

| வாகன வகுப்பு . | மாற்றல் கட்டணம் ரூ. | முற்றுரிமை சொத்தாண்மை | | | அடகு | | திருத்த கட்டணம் . |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவுக் கட்டணம் | நீடித்தல் | ரத்துசெய்தல் | பதிவுக் கட்டணம் | ரத்துசெய்தல் | |
| மோட்டார் கார் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இரட்டை பயன்பாட்டு வாகனம் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம் (விவசாய) | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம் (விவசாயமல்லாத) | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம்/ திரக்டர் சக். | 2060/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| கை திரக்டர் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் சைக்கிள் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் ரயிசிகள் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் ரயிசிகள்/ வான் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி / போக் லிப்ட் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி / பிரயிம்மூவர் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் கோச் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் அம்பியுலன்ஸ் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| அமங்கல வாகனம் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| லொறி இழுவை | 3100/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 1540/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 1540/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| விசேட பணி வாகனம் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

***காகிதாதிகள்,அஞ்சல் கட்டணம் பொருட்டு ரூ.50 அறவிடப்படும்.**

பின்னிணைப்பு -03

**வாகன மாற்றல் கட்டணம் - 2012 (சாதாரண சேவை)**

(ரூபா)

| வாகன வகுப்பு . | மாற்றல் கட்டணம் ரூ. | முற்றுரிமை சொத்தாண்மை | | | அடகு | | திருத்த கட்டணம் . |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவுக் கட்டணம் | நீடித்தல் | ரத்துசெய்தல் | பதிவுக் கட்டணம் | ரத்துசெய்தல் | |
| மோட்டார் கார் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இரட்டை பயன்பாட்டு | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம் (விவசாய) | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம் (விவசாயமல்லாத) | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம்/ திரக்டர் சக். | 1200/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| கை திரக்டர் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் சைக்கிள் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் ரயிசிகள் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் ரயிசிகள்/ வான் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி / போக் லிப்ட் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி / பிரயிம்மூவர் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் கோச் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் அம்பியுலன்ஸ் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| அமங்கல வாகனம் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| லொறி இழுவை | 2000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 800/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 800/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| விசேட பணி வாகனம் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

***காகிதாதிகள்,அஞ்சல் கட்டணம் பொருட்டு ரூ.50 அறவிடப்படும்.**

பின்னிணைப்பு – 04

**புதிய சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு ஏற்புடைய மிகைக்கட்டணம்**

**(2012)**

(ரூபா)

| சேவை | மேலதிககட்டணம் (ரூ) | |
|---|---|---|
| | சாதாரணசேவை | ஒரேநாள் சேவை |
| 1. புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | | |
| ஒரு வாகன வகுப்பு பொருட்டு | 1700.00 | - |
| இரு வாகன வகுப்புக்கள் பொருட்டு | 2000.00 | - |
| மூன்று வாகன வகுப்புக்கள் பொருட்டு | 2250.00 | - |
| 2. புதுப்பித்தல் அல்லது செல்லுபடியான காலத்தை நீடித்தல் | | |
| உரிய திகதிக்கு | 1700.00 | 2200.00 |
| தாமதமாகும் ஒவ்வொரு வருடத்துக்கு அல்லது பகுதி பொருட்டு | 250.00 | - |
| 3. சாரதி அனுமதிப்பத்திரத்தின் இணைப்பிரதியை வழங்கல் | 1700.00 | 2200.00 |
| 4. சாரதி அனுமதிப்பத்திரத்தின் தகவல்களை திருத்துதல் | 2000.00 | 2500.00 |
| 5. சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றுதல் | | |
| இருக்கிற சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக புதியசாரதி அனுமதிப்பத்திரம் | 1700.00 | 2200.00 |
| வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக புதியசாரதி அனுமதிப்பத்திரம் | | |
| - இலங்கை பிரசைகளுக்காக | 2000.00 | 2500.00 |
| - வெளிநாட்டு பிரசைகளுக்காக மட்டும் | 10000.00 | 10500.00 |
| 6. வெளிநாட்டு பிரசைகளுக்கான புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 15000.00 | - |
| 7. சாரதி அனுமதிப்பத்திர பிரித்தெடுப்பு | 500.00 | - |

| | | |
|---|---|---|
| 8. வெளிநாட்டு பிரசைகளுக்கான வண்டி ஓட்டும்அனுமதிப்பத்திரம் (ஒரு மாதத்துக்கு) | 1000.00 | - |
| 9. சருவதேச புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 2000.00 | 2500.00 |
| 10. எழுத்துப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 250.00 | - |
| 11. செயல்முறைப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 500.00 | - |